செ.வெ.எண்.33 நாள்.19.01.2018.

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 8 நபர்களுக்கு ரூ.2.16 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.**

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19.01.2018) நடைபெற்றது. இக்கூட்டத்தில் கடந்த டிசம்பர் மாதத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட 338 மனுக்களில் வேளாண்மையைச் சார்ந்த 194 மனுக்கள் மற்றும் வேளாண்மை சாராத 144 மனுக்களுக்கும் பதில்கள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இக்கூட்டத்தில், வேளாண்மைத் துறையின் மூலம் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ், ரூ.1 இலட்சம் மதிப்பில் ரூ.35 ஆயிரம் மானியத்தில் இரண்டு விவசாயிக்கு ரோட்டோவேட்டர் இயந்திரத்தினையும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கால்நடைகளுக்கான தாது உப்பு மற்றும் தீவனங்கள் 5 நபர்களுக்கும், தேசிய தோட்டக்கலைத் துறையின் சார்பில் கத்தரி குழித்தட்டு நாற்றுகள் ஒரு விவசாயிக்கு ரூ.16 ஆயிரம் மதிப்பில் 100 சதவீதம் மானியத்திலும் என மொத்தம் 8 நபர்களுக்கு ரூ.2.16 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் ஜனவரி மாதம் இயல்பான மழையளவைக்காட்டிலும் குறைவாகவே மழை பெய்துள்ளது. துற்சமயம் நமது மாவட்டத்தில் 51,026 ஹெக்டேர் நெற் பயிர் சாகுபடி உள்பட 1,21,286 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி நடைபெற்று வருகிறது. அணைகளில் 64.47 சதவீதம் நீர் இருப்பு உள்ளது. நடப்பு பருவத்திற்கு தேவையான விதை மற்றும் உரங்கள் இருப்பில் உள்ளது.

2016–17ம் ஆண்டில் ராபி பருவ நெல் பயிருக்கான காப்பீட்டுத் தொகையாக 8462 விவசாயிகளுக்கு ரூ.7.15 கோடி விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. உளுந்து பயிருக்கு 19712 விவசாயிகளுக்கு ரூ.47.35 கோடி விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. ஒக்கி புயலால் பாதிக்கப்பட்ட நெல் பயிர் சாகுபடி செய்த 29 விவசாயிகளுக்கு ரூ.1.28 இலட்சமும், வாழை மற்றும் தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்த 488 விவசாயிகளுக்கு ரூ.16.37 இலட்சமும் நிவாரணத் தொகையாக பெறப்பட்டு, விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

2016–17ம் ஆண்டில் பாரத பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தில் மக்காச்சோளம் பயிர் காப்பீடு செய்த 8,527 விவசாயிகளுக்கு ரூ.24.49 கோடியும், பாசிப்பயிறு காப்பீடு செய்த 2,666 விவசாயிகளுக்கு ரூ.7.56 கோடியும் இழப்பீடு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை விரைவில் விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். 2017–18ம் ஆண்டிற்கான பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் நெல், மக்காச்சோளம், உளுந்து மற்றும் நிலக்கடலை பயிர்களுக்கு காப்பீடு செய்வதற்கான காலக்கெடு 15.02.2018 வரையிலும், பருத்தி பயிருக்கு காப்பீடு செய்வதற்கான காலக்கெடு 28.02.2018 வரையிலும், கரும்பு பயிருக்கு காப்பீடு செய்வதற்கான காலக்கெடு 31.10.2018 வரையிலும் உள்ளது. எனவே, விவசாயிகள் உரிய காலத்தில் பிரிமியம் செலுத்தி, பயிர்களை காப்பீடு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விவசாயிகளிடம் பெறும் மனுக்களின் மீது அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொண்டு பதில்களை வழங்கிட துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., கோட்டாட்சித் தலைவர்கள் (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், வோண்மைத் துறை இணை இயக்குநர் திரு.பெருமாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மரு.ராஜேந்திரன், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர்கள் திருமதி.ஜெயபாரதி, திருமதி.சுபாவாசுகி மற்றும் அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.